(7) நடைமுறைக் கேள்வி.

ஓர் தீர்மானம் முன்மொழியப்பட்ட பிறகு அதை வாக்டுெப்புக்கு விடுவதற்கு முன் உறுப்பினரின் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்காதது குறித்து.

திரு பி. ஜி. கருத்திருமன் : தீர்மானம் வந்தவுடனேயே, அங்கத்தினர்களைப் பார்த்து, திருத்தம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்கவேண்டும். அப்படிக் கேட்கவேயில்லையே. எடுத்தவுடனேயே ஓட்டுக்கு விட்டு விட்டீர்கள். **It is out of order; I am raising a point of order, Sir.** தீர்மானம் வந்தவுடனேயே திடீரென்று ஓட்டுக்குப் போட்டுவிட்டால், எப்படி? திருத்தங்கள் இருக்கின்றனவா என்று கேட்டிருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவருக்கு நடைமுறை தெரியும். முன்பாகவே அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். அறிவிப்பே கொடுக்கவில்லையே. திருத்தங்கள் இருக்கின்றனவா என்று கேட்பது வழக்கம் கிடையாது. திருத்தம் இருந்தால், முன்கூட்டியே அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்திருந்தால், அதை அவையில் கேட்கவேண்டும். இல்லை என்றால் வழக்கமில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ரெஸல்யூஷன்கள் நேற்று ராத்திரித் தான் வந்து சேர்ந்தன. எப்பொழுது படிக்கிறது? ஒரு நல்ல முறைக்காகச் சொல்லுகிறேன். நல்லது என்று சொல்லுகிறேன்.

Thiru K. VINAYAKAM : I rise on a point of order not on the ruling but on the procedure that has been followed. When the Minister in-charge moves that the resolution be approved or that the Bill be passed it is not as if the Speaker should straightway say "Those who are for it please say 'Aye' and those who are against, please say 'No' The Speaker must look at the faces of the Members and see whether any member wants to take part in the general discussion. There need not be any amendment given to the motion. But the Members may be willing to participate in the general discussion. Even that privilege has been denied. The Speaker does not look at the faces of the Members. What you have done is right and I am not questioning your ruling. I am only speaking about the procedure that will have to be followed. It is rudimentary courtesy that you look at our faces.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு விநாயகம் கூறிய கருத்தில் நான் மாறுபடவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட தீர்மானங்களுக்கு திருத்தங்கள் கொடுப்பது, பேசுவது என்பது குறைவு. இப்படி 10 திருத்தங்கள் வந்தால் ஏதாவது ஒன்றிரண்டில் பேசுவது, விவாதம் வைத்துக்கொள்வது, திருத்தங்கள் கொடுப்பது எது முக்கியமானது என்று பார்த்துக் கொடுப்பது பழக்கம். அதுதான் நடைமுறையில் வழக்கம். இதுவும் நடைமுறையில் இருக்கிறது. ஆகவே, நேருக்கு நேராகக் கேட்கவேண்டும் என்பது இல்லை.

Thiru K. VINAYAKAM : If the Member wants to speak, you cannot deny it, is it not?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச விரும்பினால் மறுப்பதற்கில்லை. சிலவற்றிற்கு விவாதம் வருகிறது. சிலவற்றிற்கு இல்லை.

4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(இ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக நூறு கோடி ரூபாய் இருக்கலாம் என்ற மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்படுத்தல் குறித்து.

The Hon. Thiru O. P. RAMAN : Mr. Speaker, Sir, I move....

"That the proposal of the State Government under sub-section (3) of section 65 of the Electricity Supply Act, 1948 (Central Act LIV of